30.08.2017

தினமலர்

## நெல்லையில் தொடர் மழை: குற்றாலத்தில் வெள்ளப்பெருக்கு - அணைகளில் நீர்மட்டம் உயர்கிறது



திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தில் பெய்து வரும் மழையால் குற்றாலத்தில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பாபநாசம் , சேர்வலாறு உள்ளிட்ட -அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் ஜூன் மாத துவக்கத்தில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவமழை , தற்போது தாமதமாக பெய்து வருகிறது. வழக்கமாக ஆகஸ்ட் மாத கடைசி யில் குற்றாலத்தில் சீசன் முடிவுக்கு வந்துவிடும். இந்த ஆண்டு தற்போது பெய்துவரும் பலத்த மழையினால் , குற்றாலம் மெயின்அருவி, ஐந்தருவிகளில் நேற்று அதிகாலையில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் காலை முதல் பொதுமக்கள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டது. நேற்று மாலை வரையிலும் தடை நீடித்தது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மழை பெய்தது. நேற்று காலை கணக்கெடுப்பின்படி பாபநாசத்தில் 17 மி.மீ.,மழை பெய்தது. குண்டாறு அணைப்பகுதியில் 22 மி.மீ., அடவிநயினார் அணையில் 17 மி.மீ.,மழை பதிவானது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 498 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 1.55 அடி உயர்ந்து 60.00 அடியாக உள்ளது. அணை யிலிருந்து தாமிரபரணியில் 554 கனஅடி நீர் திறக்கப்படுகிறது.சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 550 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 5.59 அடி உயர்ந்து 64.30 அடியாகவும், மணி முத்தாறு அணையின் நீர்மட்டம் 32.40 அடியாகவும்

இருந்தது.கடனாநதி அணைக்கு விநாடிக்கு 113 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 45 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. பெண்கள் அறையில் புகுந்த மலை பாம்பு : குற்றாலம் மெயின்அருவியில் பெண்கள் உடை மாற்றும் அறையில் புகுந்த மலைபாம்பை வனத்துறையினர் மீட்டு வனப்பகுதியில் விட்டனர்.
குற்றாலத்தில் நேற்றுமுன்தினம் பலத்த மழை பெய்தது. இதனால் நேற்று அதிகாலை முதல்
அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குற்றாலம் மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கால் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. நேற்று காலை பெண்கள் உடை மாற்றும் அறையில் கல் மண்டபத்தில் மலைப்பாம்பு சுருண்ட நிலையில் இருந்தது. அதை வனத்துறையினர் மீட்டு மீண்டும் வனப்பகுதிக்குள் கொண்டு விட்டனர்.

## மழைபெய்தும் உயராத வைகை அணை நீர்மட்டம்



ஆண்டிபட்டி மழை பெய்தும் வைகை அணைக்கு போதிய நீர் வரத்து இல்லாததால் :, அணையின் நீர்மட்டம் உயர்வதில் சிக்கல் ஏற் பட்டுள்ளது கடந்த சில ஆண்டுகளாக . . வைகை அணை நீர்ப்பிடிப்பான வருஷநாடு மலைப்பகுதியில் போதிய மழை இல்லை இதனால் அணைக்கான நீர்வரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, அணை நீர் மட்டம் முழு அளவை எட்டவில்லை . பெரியாறு அணைக்கும் நீர்வரத்து போதுமான அளவில் இல்லை இதனால் அங்கிர .ுந்தும் தண்ணீர் வரத்து குறைவாகவே உள்ளது ஏப்ரல்., மே, ஜூன் மாதங்களில் வைகை அணை நீர்இருப்பு 21 அடி அளவுக்கு குறைந்து , குடிநீருக்கே திண்டாடும் நிலை ஏற்பட்டது இந்நிலையில் கேரளாவில் பெய்த . மழையால் பெரியாறு அணைக்கு வந்த நீரில், குறிப்பிட்ட அளவு திறக்கப்பட்டு வைகை அணையில் சேர்கிறது இந்த நீர் மதுரை., ஆண்டிபட்டி சேடபட்டி குடிநீர் - நேற்று அணை நீர் மட்டம் .திட்டங்களுக்கு மட்டும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது

30.18 அடியாக மொத்த உயரம்)71 அடி அணைக்கான நீர் .இருந்தது ( வரத்து வினாடிக்கு 113 கன அடியாகவும், அணையில் இருந்து வினாடிக்கு 40 கனஅடி வீதம் குடிநீருக்காக தண்ணீர் வெளி யேற்றப்படுகிறது . நீர்மட்டம் உயராத தால் அடுத்த மாதம் சிவகங்கை , ராமநாதபுரம் மாவட்ட இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## கரும்பு மகசூலுக்கு கை கொடுக்கும் தக்கைப்பூண்டு



மண்ணில் அங்ககத்தன்மை 'பாயின்ட் 75' சதவீதம் இருக்க வேண்டும் பசுமை . புரட்சிக்கு பின் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை அதிகளவில் பயன்படுத்தியதன் விளைவாக மண்மலட்டுத் தன்மையாகி விட்டது இதனால் . மண்ணில் அங்ககத்தன்மை'பாயின்ட் 2' என்ற அளவில் சுருங்கி விட்டது விளைவு . பயிர் விளைச்சல் இல்லை; சத்தான பயிர்கள் கிடைப்பதில்லை இக்குறைப்பாட்டை . தீர்க்கவும், மகசூல் அதிகளவு கிடைப்பதற்காகவும் யூரியா , சூப்பர் பாஸ்பேட் போன்ற செயற்கை உரங்களை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**மண்ணுக்கு தக்கைப்பூண்டு:** யூரியா, சூப்பர் பாஸ்பேட் பயன்படுத்துவதை குறைத்து இயற்கை முறையில் பயிர்கள் விளைச்சலில் அதிக மகசூல் எடுப்பது குறித்து , மதுரை வேளாண் துறை கிழக்கு வட்டார உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் கூறியதாவது : தற்போது ஓரளவு மழை . தக்கைப்பூண்டு மகசூல் இயற்கை உரத்தின் வரப்பிரசாதம் இதை பயன்படுத்தி தக்கைப்பூண்டு விதைகளை . பெய்து பூமி ஈரத்துடன் இருக்கிறது . விதைக்க வேண்டும்40 -- 45 வது நாளில் மஞ்சள் பூக்கள் பூக்கும் தருவாயில் , தக்கைப்பூண்டை நிலத்தில் மடக்கி உழவடை செய்ய வேண்டும்.

**யூரியா, பாஸ்பேட் குறைவு:** இதனால் பயிர்களின் வேர் முடிச்சுகளில் உள்ள பாக்டீரியா வலுப்பெறும் . இவை நைட்ரஜனை கிரகித்து வேர்களுக்கு அனுப்பும் . வேர்களின் நுண்ணுயிர்வளர்ச்சிக்கு உதவும் இதனால் யூரியா ., சூப்பர் பாஸ்பேட் தேவை மிகவும் குறையும் பயிர் விளைச்சலில் நல்ல மகசூல் .உரச்செலவும் ஏற்படாது . . தக்கைப்பூண்டு விதைகள் மானிய விலையில் கிடைக்கிறது .கிடைக்கும் தக்கைப்பூண்டு மட்டுமே பயன்படுத்தி மதுரை அண்டமான் கரும்பு விவசாயி ச◌ே◌ாலைமலை அதிக மகசூல் எடுத்துள்ளார் கிணற்று நீர் பாசனம் மூலம் கரும்பு . விளைச்சலில் ஏக்கருக்கு10 முதல் 12 டன் கரும்பு கூடுதலாக கிடைத்துள்ளது , என்றார்.

**ஒன்பதாவது விதை கட்டை** விவசாயி சோலைமலை கூறியதாவது கடும் வறட்சியால் : என . பயிர் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது ினும் கிணற்று நீர் பாசனத்தில் மண் வளம் பெருக தக்கைப்பூண்டு மட்டுமே பயன்படுத்தி கரும்பு பயிரிட்டு வருகிறேன் . பொதுவாக ஒரு முறை விளைவித்த பயிரை மீண்டும் அதே இடத்தில் விளைவிக்க தொடர்ந்து தக்கைப்பூண்டு . வேண்டாம் என்பது வேளாண் துறையின் அறிவுரை பயன்படுத்தி'கோ - 418' ரக கரும்பு பயிரை ஐந்து முறை பயிரிட்டு அதிக மகசூல் எடுத்துள்ளேன் . தொடர்ந்து ஒன்பது முறை வரை கரும்பையே பயிரிட உள்ளேன் . சாதாரணமாக ஏக்கருக்கு60 டன் கரும்பு கிடைக்கும் தக்கைப்பூண்டு . பயன்படுத்துவதால் ஏக்கருக்கு70 முதல் 72 டன் வரை கூடுதல் மகசூல் கிடைத்து வருகிறது, என்றார். தொடர்புக்கு 93441 31977.- காசுப்பிரமணியன்., மதுரை.

## பயிர் பாதுகாப்பில் புதிய யுக்தி



வெயில் கொடுமைக்கு உயிரினம் மட்டுமல்ல ; பயிர்களும் மடிகின்றன பயிர்களை . மழை பெய்யாத மோசமான சூழ்நிலையில் கடும் வறட்சியால் . காக்க மழை வேண்டும் வாடும் பயிர்களை பாதுகாக்கும்'திரவ நுண் கிருமி ' உருவாவதை கோவை

வேளாண்மை பல்கலை கண்டுபிடித்துள்ளது . இக்கிருமி மிகவும் நுண்ணியதாகும் . பயிர்களுக்கு நன்மை செய்யும் தன்மை கொண்டது இளம் சிவப்பு ., ஊதா நிறம் கொண்ட இந்த உயிரி அற்புதமான சக்தி கொண்டுள்ள இனமாகும் பயிர்களின். உயிரை காக்கும்'மித்தலோ' எனும் கிருமி இதை உயிர் சத்துள்ள உரக் கரைசலில் . இட்டு, அந்தந்த பயிர்களின் இலைகளின் வழியாக தெளிக்கப்பட்டதும் , ஏற்கனவே வாடிக்கொண்டிருந்த, அந்தப் பயிர்களை ஏறத்தாழ 15 நாட்களுக்கு மேலாக வாடாமல் காத்து வந்தது ஆய்வில் கண்டறியப்பட்டது இச்சோதனை பயிர் விளைச்சலில் . இக்கரைசலை. சாதனையாக கருதப்படுகிறது200 லிட்டர் தண்ணீரில் , 200 மில்லி லிட்டர் கரைசலை சேர்ந்து , ஒரு ஏக்கர் பயிர்களுக்கு தெளிப்பது சிறந்தது இதை . பயிரின் வளர்ச்சிப் பருவம் . கைத்தெளிப்பான் மூலம் செய்வதே நல்லது, பூக்கும் பருவம், வளர் பருவம் எனப்படும் மூன்று நிலைகளிலே , கைத்தெளிப்பான் மூலம் அதை தெளித்தால் பல நாட்களுக்கு பயிர்கள் வாடாமல் விளங்கும் பின் மழை . பெய்தால் அல்லது நீர்ப்பாசனம் செய்தால், அந்த கரைசலை பிரயோகிக்க வேண்டியது அவசியம் இருக்காது இதுதொடர்பான விபரங்களுக்கு .'கோவை வேளாண்மை பல்கலை கழகம், நுண் உயிரியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மையம், கோவை -641 003' என்ற முகவரியில் ஆர்வம் உள்ளோர் தொடர்பு கொள்ளலாம் .

**- எஸ்நாகரத்தினம்.** வேளாண் ஆலோசகர், விருதுநகர்.

## 'வேம்பு' மனிதனின் 'மாண்பு'



வேம்பு 200 ஆண்டு உயிர் வாழும் பூக்களையும் ., மஞ்சள் நிற பழங்களையும் தரும் . சமஸ்கிருதத்தில்'அரிஸ்தா' என்பர் அதற்கு .'கிராம மருந்தகம் ' என பொருள் . அமெரிக்காவில்1992ம் ஆண்டு நடந்த ஆய்வு அறிக்கையில் , 'தேசிய அறிவியல்

கழகம்' வேம்பு . ஒரு சர்வரோக நிவாரணி எனக் கூறியுள்ளது -'நிம்பிடின்' என்ற பொருள் வேம்பில் உள்ளது தான் இதன் மருத்துவ குணத்திற்கு காரணம் .

**மருத்துவ குணங்கள்** நோய் தீர்க்கும் அருமருந்தாக வேம்பு உள்ளது கால்நடைகளுக்கு . மருந்தாகிறது .பூச்சிக் கொல்லியாகப் பயன்படுகிறது .விவசாய பயிருக்கு உரமாகிறது . சர்க்கரை நோயை . வலியை குறைக்கும் . நோய் எதிர்ப்பு சக்தி தரும் . அழற்சி நீக்கும் கல்லீரலை நச்சில் இருந்து . நோய் தரும் வைரசை கட்டுப்படுத்தும் .கட்டுப்படுத்தும் மைய நரம்பு .நீக்கும் மண்டலத்தை கட்டுப்படுத்தும் . குடல் புழுவை அழிக்கும் . ரத்த . மனிதர்களை தாக்கும் பூஞ்சை காளான்களை அழிக்கும் . காய்ச்சலை குறைக்கும் .குழுத்தம் குறையும்

**நம்மாழ்வார் வாக்கு** வேப்ப எண்ணெய் பல மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகிறது . இதன் கொட்டை, இலை, வேர், பட்டை என ஒவ்வொன்றும் மருந்து தயாரிப்பில் பயன்படுகின்றன .5 ஆயிரம் ஆண்டுகளாக ஆயுர் வேதம் , சித்த மருத்துவத்தில் வேம்பு பயன்பட்டு வருகிறது மனிதர்களுக்கும் ., விலங்குகளுக்கும் வேப்ப எண்ணெய் கொடுக்கப்பட்டு 100 சதவீதம் வேம்பின் மருத்துவ குணங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன . இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ நம்மாழ்வார்., எங்கு சென்றாலும் வேம்பின் மகத்துவம் பற்றி பேசுவார் .'மரம் நட வேண்டுமா ? வேப்ப மரப் புண்ணாக்கு போடு . பூச்சி வந்துள்ளதா? வேப்ப எண்ணெய் கலந்து மருந்து அடி மூலிகை பூச்சி விரட்டி . தயாரிக்க வேண்டுமா? வேப்ப இலையை பயன்படுத்து; வேப்பங் கொட்டைச் சாற்றை பயன்படுத்து,' என அறிவுரை வழங்குவார்.

**பயிருக்கு ஏற்ற உரம்** வேப்பம் புண்ணாக்கு பயன்படுத்துவது பயிருக்கு ஏற்ற உரமாகும்புழு ., பூச்சிகள் அண்டாது கிராமங்களில் மூலிகை . பயிர் நன்கு வளரும் . பூச்சி விரட்டி தயாரிக்க அதிகளவு வேப்ப இலையைபயன்படுத்துகின்றனர் வேப்பம் . பட்டை, விதைகள், இலை, புண்ணாக்கு, எண்ணெய் என அனைத்து பொருட்களும் விவசாயிகளுக்கு சிறப்பான பயன் தருகிறது ரசாயன உரத் தயாரிப்பாளர்கள் வேப்ப . எண்ணெய் கலந்த யூரியாவை, வேப்ப புண்ணாக்கு இயற்கை உரத்தை தயாரிக்கின்றனர்.

**கல்லீரல் நோய் விரட்டி** கன்றுகளுக்கு வரும் கல்லீரல் பாதிப்பு , பசியின்மை, சோர்வு, எடை குறைவுக்கு வேப்ப இலைப்பொடி கொடுக்கலாம் மடிவீக்க நோய்க்கு . வேப்பமரப் பட்டை .மருந்தாகும், இலையில் இருந்து கஷாயம் செய்து பால்

காம்புகளில் தடவினால் கிருமிகள் அழியும் மாடுகளுக்கு கர்ப்பப்பை . கோளாறு நீங்கி சினை பிடிக்கும் வேப்ப இலை ., புளிய இலை சேர்த்து அரைத்து கால்நடை கட்டிகளுக்கு மருந்தாக்கலாம் கோழி அம்மைக்கு மஞ்சள்., வேப்ப இலை அரைத்து பூச குணமாகும் இப்படி அனைத்து வகையிலும் . வெள்ளை கழிச்சலுக்கு மருந்தாகும் . மனிதன், கால்நடைகள், சுற்றுச்சூழல் மேம்பாட்டு காக்கும் வேப்ப மரங்களை அதிகளவு வளர்த்து நோய் நொடியில் இருந்து விடுபடுவோம் .
தொடர்புக்கு 93807 55629.- எம்ஞானசேகர். விவசாய ஆலோசகர், சென்னை.

தினமணி

## கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 35 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் அன்னக் கழுத்துப் பூ!

கொடைக்கானலில் வருடந்தோறும் அன்னக்கழுத்துப் பூ பூக்கும் நேரம் சுற்றுலாப் பயணிகள் வருகை களை கட்டும். இந்தப் பூவின் அதிசயமே இது 35 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் என்பது தான். சிலர் இந்தப் பூ 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் என்றும் கூறுகிறார்கள். அன்னப்பறவையின் கழுத்துப் போல வளைந்திருக்கும் இந்தப் பூச்செடி ஒவ்வொன்றும் தன் வாழ்நாளில் 35 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் தன்மை கொண்டது. இந்த ஆண்டில் தற்போது கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் பூத்துச் செழித்திருக்கும் அன்னக்கழுத்துப் பூ அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

35 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் பூ என்பதால் அதனுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள சுற்றுலாப் பயணிகளிடையே ஆர்வம் மிகுதியாகி வருகிறது. சுமார் 10 அடி முதல் 15 அடி உயரம் வரை வளரக்கூடிய இந்தச் செடியின் கழுத்துப் பகுதி அன்னத்தின் கழுத்தை நினைவுறுத்துவதால் தான் இந்தப் பூச்செடிக்கு அப்படி ஒரு பெயர் வந்தது என்கிறார்கள் தோட்டக் கலைத்துறையினர்.

இதே அன்னக்கழுத்துப் பூச்செடி ஒன்று கடந்த ஆண்டும் கொடைக்கானல் ,தமிழ்நாடு விடுதியில் பூத்திருந்ததை அன்றைய தினம் செய்தி ஊடகங்கள் பதிவு செய்திருந்தன. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே மலரும் குறிஞ்சிப் பூவும் கூட இதே

கொடைக்கானல் மலையை ஒட்டிய அடிவாரப் பகுதிகளில் தான் மிகுதியாகப் பூக்கப் கூடியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கோவை, நீலகிரியில் கனமழைக்கு வாய்ப்பு- வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை: கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறுகையில், வெப்பச் சலனம் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் சில இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும். கோவை, நீலகிரி மாவட்டத்தில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் கனமழை பெய்யும் என்றனர்.

## நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை: பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம், சேர்வலாறு, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் கடந்த 2 தினங்களாக மிதமான மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், சேரன்மகாதேவி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் உள்பட இம்மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் வெப்பம் குறைந்து காணப்பட்டது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை- 17, பாபநாசம் கீழ் அணை- , சேர்வலாறு அணை-3, மணிமுத்தாறு அணை-2, கடனாநதி அணை-4, ராமநதி அணை-3, கருப்பாநதி அணை- 6, குண்டாறு அணை- 22, அடவிநயினார் அணை- 17, தென்காசி-6.4, செங்கோட்டை-8, ஆய்க்குடி-3, அம்பாசமுத்திரம்-5, கன்னடியன் அணைக்கட்டு-6.4, பாளையங்கோட்டை-1.4.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1498.15 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 1.55 அடி உயர்ந்து 60 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக 554.75 கனஅடி திறந்துவிடப்பட்டுள்ளது.

சேர்வலாறு அணைக்கு விநாடிக்கு 550 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 5.59 அடி உயர்ந்து 64.30 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 32.40 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 1.50 அடி உயர்ந்து 54.80 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 64 அடியாகவும் இருந்தது.

இதேபோல், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 32.15 அடியாகவும், குண்டாறு அணையின் நீர்மட்டம் 36.10 அடியாகவும், அடவிநயினார் அணையின் நீர்மட்டம் 88 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 3.25 அடியாகவும், நம்பியாறு அணை நீர்மட்டம் 5.84 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 9.00 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 113 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 45 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ராமநதி அணைக்கு விநாடிக்கு 49.50 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 20 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. குண்டாறு அணைக்கு வந்து கொண்டிருந்த 16.92 கனஅடி உபரிநீர் அப்படியே திறந்துவிடப்பட்டுள்ளது. கருப்பாநதி அணைக்கு 16 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 20 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.